**People's Watch**
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

# பத்திரிக்கை செய்தி

சென்னை கெல்லீஸ் அரசு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவர்களுக்குள் நடந்த மோதலும் அங்கிருந்து 33 சிறுவர்கள் நேற்று தப்பி ஓடிய சம்பவமும் அவர்களை காவல்துறை பிடித்த விதமும் நான்கு சிறுவர்கள் தற்கொலைக்கு முயன்ற சம்பவமும் மிகுந்த வருத்தமளிக்கிறது. இந்த சம்பவத்திற்கு காரணமான சமூகப்பாதுகாப்பு துறையை (Directorate of Social Defence) மக்கள் கண்காணிப்பகம் வன்மையாக கண்டிக்கிறது. இந்த சம்பவம் தொடர்பாக கீழ்க்கண்ட பத்திரிக்கை செய்தியினை மக்கள் கண்காணிப்பகம் வெளியிடுகிறது.

1. சென்னை கெல்லீஸ்-ல் உள்ள அரசு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் இருக்கும் அனைத்து சிறுவர்களின் நிலை குறித்து ஆய்வு செய்திடவேண்டும். ஓய்வு பெற்ற நீதிபதிகளோ, ஓய்வு பெற்ற காவல்துறை உயர் அதிகாரிகளோ, அரசுப்பணியில் இருந்து ஓய்வுபெற்றவர்களோ இந்த சம்பவத்தினை ஆய்வு செய்ய கூடாது என மக்கள் கண்காணிப்பகம் வலியுறுத்துகிறது. குழந்தை உரிமை சார்ந்த பணிகளில் நீண்ட அனுபவமுள்ளவர்கள் தான் இந்த சம்பவத்தை விசாரிக்க முடியும் என மக்கள் கண்காணிப்பகம் கருதுகிறது. குறிப்பாக ICCW எனும் குழந்தை நல அமைப்பில் நீண்ட காலம் பணிசெய்த மூத்த குழந்தை உரிமைசெயல்பாட்டாளர் முனைவர்.ஆண்டாள் தாமோதரன் மற்றும் யுனிசெப் அமைப்பில் குழந்தை பாதுகாப்பு நிபுணராக நீண்ட காலம் பணியாற்றிய மூத்த குழந்தை உரிமைசெயல்பாட்டாளர் முனைவர்.வித்தியாசாகர் போன்ற குழந்தை நிபுணர்கள் அடங்கிய குழு இந்த ஆய்வினை நடத்திட வேண்டும்.

2. அரசுநியமனம் செய்கின்ற விசாரணைக்குழு, ஒவ்வொரு சிறாரும் எவ்வளவு நாட்கள் இல்லத்தில் இருந்து இருக்கிறார்கள், ஜாமீன் மனு போட்டு எவ்வளவு நாட்கள் ஆகிறது, எத்தனை முறை வாய்தா நடந்திருக்கிறது போன்ற விபரங்களை கண்டறிய வேண்டும் என மக்கள் கண்காணிப்பகம் வலியுறுத்துகிறது.

3. இந்த சம்பவத்தினை மாநில மனித உரிமை ஆணையம் தன்னிச்சையாக (Suo – Moto) தானாக முன்வந்து விசாரணை செய்திட வேண்டும். இந்த ஆணையம் குழந்தை நிபுணர்கள் அடங்கிய குழுவினரால் விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

4. தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு அதன் சட்ட விதிகள் பிரிவு 12ன் கீழ் காவலில் உள்ளவர்களுக்கு இலவச சட்ட உதவி அளித்திட வேண்டும். காவலில் உள்ள சிறார்கள் தப்பியதன் காரணமாகவும் அவர்களுக்கு தொடர்ச்சியாக ஜாமீன் மறுத்ததாகவும் கூறப்படுகிறது. தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு மூத்த அனுபவமிக்க குற்றவியல் வழக்கறிஞரை நியமித்து இந்த சிறார்களை பிணையில் எடுத்து வழக்கினை நடத்த வேண்டும் என மக்கள் கண்காணிப்பகம் வலியுறுத்துகிறது.

5. இதற்கு முன்பு இதே போன்று இதே இல்லத்தில் உள்ள சிறுவர்கள் தப்பி ஓடிய சம்பவம் நடந்துள்ளது. தமிழக அரசின் சமூகப்பாதுகாப்பு துறை அலுவலகம் அமைந்துள்ள வளாகத்தின் நுழைவு பகுதியில் இந்த அரசு கூர்நோக்கு இல்லம் அமைந்துள்ளது. தனது வளாகத்தில் உள்ள இல்லத்தையே கண்காணிக்க முடியாத அவலநிலையில் இந்த துறை உள்ளதை இந்த தொடர் சம்பவங்கள் சுட்டி காட்டுகின்றன. அரசு சாரா நிறுவனங்கள் நடத்தும் இல்லத்தை எந்த லட்சணத்தில் இந்த துறை அதிகாரிகள் கண்காணிக்க ஆணையிடுகிறார்கள் என்பது வியப்பாக இருக்கிறது. இந்த சம்பவத்திற்கு சமூகப்பாதுகாப்பு துறை (Directorate of Social Defense) ஆணையர், இணை இயக்குனர் மற்றும் கண்காணிப்பு பொறுப்பில் உள்ள அதிகாரிகள் அனைவரும் பொறுப்பேற்க வேண்டும் என மக்கள் கண்காணிப்பகம் வலியுறுத்துகிறது.

6. அரசு சார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற குழந்தைகள் இல்லத்தில் சமூகப்பாதுகாப்பு துறை மற்றும் சமூக நலத்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தி தவறுகளை கண்டறிந்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர். குறிப்பாக உள்கட்டமைப்பு வசதி, குழந்தைகள் நலம் / கவனிப்பு முறை போன்ற காரணங்களை மையப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது வரவேற்கககூடிய அம்சமாகும். ஆனால், இந்த அரசு சார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற வெவ்வேறு விதமான குழந்தைகள் இல்லத்தை விட அரசால் நடத்தப்படுகின்ற குழந்தைகள் இல்லம் மிக மோசமாக இருப்பதை இது போன்ற சம்பவங்கள் நிருபிக்கின்றன. இந்த இல்லங்களிலும் உள்கட்டமைப்பு வசதி குறைபாடு, குழந்தைகள் நலம் / கவனிப்பு குறைபாடு உள்ளன. இளம் சிறார் நீதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பலவிதிமுறைகள் பின்பற்றப்படவில்லை. இது போன்ற அரசு குழந்தைகள் இல்லம் கண்காணிப்பு செய்யப்படாமல் உள்ளது.
7. சென்னை கெல்லீஸ் அரசு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் உள்ள சிறுவர்கள் முறையாக கையாளப்படவில்லை. இவர்களுக்கு உளவியல் ரீதியிலான ஆலோசனை வழங்கப்படவில்லை என அறிய முடிகிறது.
8. இந்த இல்லத்தில் 70 க்கும் மேற்பட்ட சிறார்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். வடமாவட்டங்களில் உள்ள சிறார்கள் இங்கு அடைக்கப்படும் நிலை உள்ளது. இளம் சிறார் நீதிச்சட்டத்தின் படி மாவட்டம்தோறும் இந்த சீர்திருத்த இல்லங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
9. இந்த இல்லத்தில் உள்ள சிறார்கள் துன்புறுத்தப்படும் நிலை உள்ளது. இளம் சிறார் நீதிச்சட்டம் 2015 பிரிவு 3(vi)ல் விளக்கப்பட்டுள்ள “Principle of safety”யின் படி இந்த சிறார்கள் பாதுகாப்பாகவும், துன்புறுத்தலுக்கு உள்ளாக்காமலும் மற்றும் தவறான அணுகுமுறையால் கையாளப்படாமலும் இருப்பதை உரிய அதிகாரிகள் உறுதி செய்யப்பட வேண்டும். இளம் சிறார் நீதிச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள குழந்தை நேய முறையில் (child friendly) இந்த சிறார்கள் அணுகப்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

10. இளம் சிறார் நீதிச்சட்டம் 2015 பிரிவு 2(46)ல் விளக்கப்பட்டுள்ள “place of safety” யின் படி இந்த சிறார்கள் இருக்கும் கூர்நோக்கு இல்லங்கள் கண்டிப்பாக காவல் லாக்கப் அல்லது சிறைச்சாலை போன்று இருக்ககூடாது. இவர்கள் சீர்திருத்தப்பட வேண்டும். இவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் இந்த இல்லங்கள் சிறைச்சாலை போன்றே செயல்படுகிறது. இந்த சிறார்கள் குற்றவாளிகளாவே நடத்தப்படுகிறார்கள், கைதிகளாகவே அடைக்கப்படுகிறார்கள், காவல்துறையின் அணுகுமுறையால் இவர்களின் எதிர்கால வாழ்க்கை சிதைக்கப்படுகிறது. அதனால் தான் சிறைச்சாலையில் நடப்பது போன்று இரு கோஷ்டிகளாக இந்த சிறார் பிரிந்து தங்களுக்குள் மோதும் நிலை உருவாகியிருக்கிறது. இது தமிழக அரசிற்கு அவமானகரமான செயலாகும்.
11. நன்னடத்தை அலுவலர்களால் அல்லது குழந்தை நல அலுவலரால் சீர்நோக்கு இல்லத்தில் இருக்கும் சிறார் பற்றிய சமூக ஆய்வு அறிக்கையை (Social Investigation Report) இரண்டு வாரத்திற்குள் சிறார் நீதி வாரியத்தில் (Juvenile Justice Board) அளிக்க வேண்டும் என சிறார் நீதிச்சட்டம் 2015 பிரிவு 13(1)ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பல மாதங்களாக இந்த சமூக ஆய்வு அறிக்கை தாக்கல் செய்யப்படாமல் உள்ளது.

மேற்கண்ட செய்தியினை தங்களது நாளிதழில், தொலைகாட்சியில் வெளியிடுமாறு வேண்டுகிறோம்.

என்றும் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி திபேன்)
செயல் இயக்குனர்
மக்கள் கண்காணிப்பகம்
12.07.2016